# திடல்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

ஆகஸ்ட் 2021

Made with PosterMyWall.com

# கல்லிலே கலை வண்ணம் கண்டார்

## கருப்பு ஒரே நிற கழுவும் வரைதல்



ஆங்கிலத்தில் **wash technique** என்று அழைக்கப்படும் ஓவிய பாணி.
சோழர் கால பழமையான கோயில்களில் உள்ளவை எல்லாம் கல்லிலே கைவண்ணம் கண்டதுதான். இந்த சிற்பங்களின் முழுமையான அதி அற்புதமான அழகை மிகச் சரியாக வெளிக்கொணர்வது கருப்பு வெள்ளை படங்களே! அவை புகைப்படங்களோ அல்லது ஓவியங்களோதான்.

Made with PosterMyWall.com

அப்படிப்பட்ட ஓவியக் கலையே **wash paintings.** ஒரே ஒரு சொட்டு கருப்பு வண்ணத்துடன் தண்ணீர் சேர்த்து துவங்கும் இந்தப் படங்கள் எப்படி முடியும் என்பது நம் கையில் இல்லை. இந்த ஓவிய முறை ‘சித்திரமும் கைப்பழக்கம்’ என்பதன் சிறந்த உதாரணம்.

தஞ்சை பெரிய கோயிலின் வீணை மீட்டும் சரஸ்வதி, மகாபலிபுரத்தின் நடன மங்கை மற்றும் பேலூரின் நடனத் தாரகை - இந்த மூவரையும் இங்கு **wash paintings** ஆக உங்களுடன் பகிர்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.





மஹா ராமஸ்வாமி

Made with PosterMyWall.com



Art by
Evangeline

Made with PosterMyWall.com

# அம்மா என்றால்...



அம்மா என்றால் பாசம்,
அம்மா என்றால் நேசம்,
அம்மா என்றால் அளவில்லா
அக்கறை.

அம்மா என்றால் தியாகி,
அம்மா என்றால் சகி,
அம்மா என்றால் சுவையான
உணவு.

அம்மா என்றால் ஊக்கம்,
அம்மா என்றால் இரக்கம்,
அம்மா என்றால் அயரா
அன்பு.



அம்மா என்றால் அறிவு,
அம்மா என்றால் பரிவு,
அம்மா என்றால் உயிரின்
மகிழ்ச்சி.


நன்றி அம்மா!

இஷிதா மன்னார்
முன்னாள் மாணவி, தமிழ் மலர்
மன்றம்.
உறுப்பினர், தமிழோசை.

Made with PosterMyWall.com



Art by
Evangeline




Made with PosterMyWall.com

## இது நம்ம ஊரு...

மார்ட்டின் லூதர் கிங்  மற்றும்
மகாத்மா காந்தி  - இந்த
இருவரையும் தொடர்பு படுத்தி
ஒரு விஷயம் நம்ம ஊரில்
இருப்பது தெரியுமா? வாருங்கள்,
நடைப் பயின்றோ, மிதிவண்டி
மிதித்தோ கிளீவ்லாந்து நகருக்கு
அழகு சேர்க்கும் இரண்டடுக்கு
வீதிகளில் பரவி இருக்கும்
"கலாச்சார பூங்கா" வினை சுற்றி
பார்க்கலாம்.
இந்த மாநகரை தங்கள் வீடாக
தேர்ந்து எடுத்திருக்கும்
அனைத்து இனத்தை சேர்ந்த
மக்களின் கலாச்சாரத்தை
கொண்டாடும் விதமாக இந்த
பூங்காக்கள் அமைந்து உள்ளது.

Made with PosterMyWall.com




இந்த பூங்காக்களை பற்றி சொல்ல பல விஷயங்கள் இருந்தாலும், நமது இந்திய கலாச்சாரத்தை போற்றும் சில விஷயங்களை பற்றி இங்கு அறிவோம்.

1. 2005 ஆம் ஆண்டில், இங்கு இந்திய கலாச்சார பூங்கா அமைக்கப் பட்டது.

2. இந்த பூங்காவில் நமது காந்தி தாத்தா கம்பீரத்துடன் காட்சி அளிக்கிறார். மார்ட்டின் லூதர் கிங் புலவர்டில் அவரது சிலை அமைந்து இருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

3. காந்தியின் சிலை சுற்றிலும் ஆறு பாரம்பரிய தூண்கள் அமைந்துள்ளது. இவை உலகளாவிய சகோதரத்துவம், மரபு, தலைமைத்துவம், நவீன இந்தியா, (அமெரிக்க-இந்திய) இணைப்புகள் மற்றும் கலை மரபுகள் என்று ஆறு தலைப்புகளில் நல்ல பல விஷயங்களை நமது சக குடிமக்களுக்கு பறைசாற்றுகிறது.

4. இந்த பூங்காவை ஒட்டியவாறு **Doan Brook Watershed** ஓடுவது நம்ம இந்தியாவில் பரவிக் கிடைக்கும் பல நதிக்கரைகளை நினைவுப் படுத்துவதாக உள்ளது.

Made with PosterMyWall.com

5. இவை அனைத்துக்கும் சிறப்பு சேர்க்கும் வண்ணம், பூங்காவின் நுழை வாயிலில் இந்தியாவின் 15 மொழிகளில் நம்மை வரவேற்கும் கல்வெட்டுகள் நடை பாதையில் பதிந்து இருப்பது மெய் சிலிர்க்க வைக்கும் அனுபவமாகும்.

இந்த பூங்காவில் சில மணித்துளிகள் நம்மை மறந்து நம் இந்திய தொடர்புகளை நினைவுக் கூர்ந்த பின்னர், இன்னும் சில பூங்காக்களும் இந்தியாவிற்கும் இருக்கும் தொடர்புகளையும் பார்க்கலாம்.

1. ஷேஸ்பியர் பூங்கா (அ) பிரிட்டிஷ் பூங்காவில், இந்திய தேசிய கீதத்தை இயற்றிய சர். இரவீந்தரநாத் தாகூர் அவர்கள் வருகை புரிந்ததை நினைவூட்டும் வண்ணம் கல்வெட்டு சில ஆண்டுகள் முன் வரை இருந்தது.

2. தன் நிலம் துறந்து நம் நிலம் நாடி தன்னிலம் அற்ற மானுட சேவை புரிந்து தூய அன்னை தெரசா அவர்களின் சிலை அல்பேனிய கலாச்சார பூங்காவில் காணலாம்.

3. **American Legion Peace Garden** வில் உலக நாடுகளின் பங்கை போற்றும் விதமாக பல நாடுகளில் இருந்து கொண்டு வரப்பட்ட மண்ணை கலந்து இந்த பூங்காவை அமைத்து உள்ளனர். நம் ஊரிலேயே, இந்திய மண்ணின் மீது நடக்கும் பாக்கியம் நம்ம க்ளீவ்லாந்து இந்தியர்களுக்கு மட்டுமே உரித்தானது என்றால் மிகையாகாது.

இயற்கை அன்னை இருபுறமும் சூழ்ந்து இரண்டடுக்கு சாலைகளில் உலக கலாச்சாரம் அனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டாடும் சிறப்பு நம்ம ஊரையே சாரும்.

ஒவ்வொரு ஆண்டும் "ஓர்

Made with PosterMyWall.com

இயற்கை அன்னை இருபுறமும் சூழ்ந்து இரண்டடுக்கு சாலைகளில் உலக கலாச்சாரம் அனைத்தையும் ஒரே இடத்தில் கொண்டாடும் சிறப்பு நம்ம ஊரையே சாரும்.
ஒவ்வொரு ஆண்டும் "ஓர் உலக நாள்" இந்த பூங்காக்களில் விமரிசையாக கொண்டாடப் படும். இந்த ஆண்டு அது ஆகஸ்ட் 29, 2021 அன்று கொண்டாடப் படும். வாருங்கள், ஒரு மாலைப் பொழுதை இயற்கையின் மடியில் கழிப்போம்.

மன்னார் தண்டபாணி
இணை-நிறுவனர், தமிழோசை

Made with PosterMyWall.com

## #என், எங்கள் #துணை (பெண்) தேவதைகள்



எங்க அம்மாகிட்டேந்து கற்று கொண்ட நல்ல பழக்கத்துல இதுவும் ஒன்று. நம் வீட்டுக்கு உதவி செய்யவந்ததுணை தேவதைகளை எப்படி மதிப்பது, பாசமா இருப்பது, நம் குடும்பத்தில் அவர்களையும் ஒருத்தராநினைப்பது, இதெல்லாம் தாண்டி, அவர்கள் நமக்கு பக்கபலமா இருப்பது போல, நாமும் எப்படி அவர்களோடவாழ்க்கையில் இருக்கலாம் என்பதுபோன்றதை அருமையாக இருந்து சொல்லி கொடுத்தஅம்மாவின்குணத்தை பெருமையாக நினைக்கிறேன்.

பல தடவை நினைச்சு பார்த்தா அதிசயமா இருக்கும்.. போன வாரம் நடந்தது கூட மறந்து போயிருக்கலாம்.. ஆனால் எப்படி சின்ன வயது நினைவுகள், நிகழ்ச்சிகள் மறப்பதில்லை,மறைவதில்லைன்னு??!!எனக்கு அப்பமூன்று அல்லது நான்கு வயசு இருக்கலாம். நாங்க திருச்சியில இருந்த போது (இந்த புத்திசாலி பிறந்த ஊர்) வீடு இருந்தும் போக பிடிக்காமல், எங்க வீட்டோட தங்கி இருந்தவர் பேர் லட்சுமி. எனக்கு தெரிந்த, பார்த்த, முதல் துணை தேவதை. ஒடிசலான தேகம். கொஞ்சம் வயதானவள்.

Made with PosterMyWall.com

பிளவுஸ் போட்டுக்காம காதுலபெரிய தொங்கட்டானோடு (பாம்படம்), பல்லு சிலது போய், ஆனா சிரிச்ச முகத்தோடு "என்ன சின்னது, இன்னுமா முழிப்பு வரலைன்னு" ஒரு நாள் போல அஞ்சு, அஞ்சரை மணிக்கு எழுப்பி என்னை அழவைப்பதுஅரை குறையாக ஞாபகத்தில் இருக்கு. "லட்சுமி, வேண்டாமே அவளை விடேன்.. அழ ஆரம்பிச்சா சைரனே வேண்டாம்னு" அம்மா சொல்வதும் வாடிக்கையாக நடக்குமாம்.. கைக்கு ஒத்தாசையா அம்மா கூடவே, என்னையும் இடுப்பில் தூக்கிண்டு சுத்திண்டே இருப்பா. பிறகு திடீரென்று எதிர்பார்க்காமல் எங்க அப்பா இறந்து விட, எல்லாம் போய், வேறு வழி தெரியாமல் எங்கள் குடும்பம் சென்னைக்கு கிளம்ப வேண்டி இருந்தபோது, லட்சுமி, "என்னையும் உன்னோடு கூட்டிண்டு போயிடு" ன்னு விக்கி விக்கி முதல் தடவை அழுதுபார்த்ததை என்னவவோ நான் மறக்கவே இல்லை. "நம்பலே என்ன பண்ணபோறோம்னு தெரியலையே, இதுலஎப்படி இது சாத்தியம்" ன்னு அவளை பிரிய மனம் இல்லாமல், புலம்பிண்டே வந்தேன்னு" அம்மா அடிக்கடிசொல்லி கேட்டு இருக்கேன். அப்பப்போ "லட்சுமியை உனக்கு ஞாபகம் இருக்கான்னு" என்னை கேக்கும்சாக்கில், அம்மாவும் நினைத்து வேதனைபடுவதை பல வருஷம் கவனித்து இருக்கேன்.

Made with PosterMyWall.com

பிறகு அமைந்தது மங்கம்மா.. இவளும் தேசலான தேகம். கணவன் சந்தேகபட்டதில், இரண்டு பையன்களைவிட்டு விட்டு, தன் மேல் மண்ணெண்ணை ஊத்தி சாக போக, தெய்வாதீனமாக பக்கத்து வீட்டுகாரர்கள்காப்பாற்ற, உயிர் தப்பியது. ஆனால் பாவம்... ஒரு பக்க கண், கை, கால் சரி இல்லாமல் போனது. . வேலைகேட்டு வரும்போது, எங்க அம்மாவை மங்கம்மாவுக்கும், மங்கம்மாவை அம்மாவுக்கும் பிடித்து போனது. ஆளுதான் நரையான்.. ஆனா குரல்... அம்மாடி... எட்டு ஊருக்கு கேக்கும். சூப்பரா வேலை செய்வா. வேலை முடிந்தாஇவளும் வூட்டுக்கு போகாம, என்னை வம்பு இழுத்துகின்னே இருப்பா.. ‘‘மங்காத்தா (நான் மட்டும் அப்படி தான்கூப்பிடுவேன்) எப்ப உன்
வீட்டுகாரரை ஐ தைரியமா அடிக்க போறேன்னு’’ நான் கேக்கும் போதெல்லாம் ‘‘அய்யஅது கிடக்குது உடுன்னு’’ சிரிப்பா... நான் ஸ்கூல் லேந்து பசியில வருவேன். எங்க அம்மா ‘‘கொஞ்சம் இரு, வென்னீரை கையில கொட்டிண்ட மாதிரி குதிக்காதே .. மங்கம்மாவுக்கு இரண்டு அடை சூடா வார்த்துகொடுத்துண்டு உனக்கு கொடுக்கறேன்னு’’ சொல்லும்

Made with PosterMyWall.com

போது மட்டும் எனக்கு இந்த மங்காத்தாவை பிடிக்காது. என்ன பண்ணாலும் எங்களுக்கு தெரியாம, நாங்க சாப்பிடறதுக்கு முன்னாடி, ஒரு பெரிய டப்பாவில சுட சுடபோட்டு அடுப்புகீழ தள்ளி வெச்சுடுவா.“அப்புறம் இல்லாம
போயிடுத்துன்னா? பாவம், இரண்டு பசங்க வேறு, ஆசையா இவ கொண்டுவர சாப்பாட்டுக்காக காத்து கொண்டு இருக்கும்”.. இது... நாங்க தப்பி தவறி மறைச்சுவெச்ச டப்பாவை கண்டு பிடிச்சுட்டா, எங்க அம்மா கிட்டேந்து வர அதிரடியான பதில். விவரம் போறாத அந்தவயசுல “இந்த மங்காத்தாகிட்ட அம்மாக்கு எதுக்கு இவ்வளவு பாசமான்னு” கோபம் வரும். பழி சண்டைக்குநிப்பேன். இதை எழுதும் போது வெக்கத்தோடு சேர்ந்து சிரிப்பும் வருது.

கல்யாணத்துக்கு அப்புறம், வீட்டு வேலைக்கு ஆளை நியமிக்க, அனுபவம், வயது போறவில்லை. மங்காத்தாவைமட்டுமே பார்த்து வளர்ந்ததால் விவரமும் இல்லை. அதற்கு ஏற்ற மாதிரி வந்தவள் மூன்று நாள் கூடதங்கவில்லை. வராததுக்கு காரணம் இருந்தது. புதுசா கட்டாக மர பீரோவில் வைத்து இருந்த பணத்தைகாணவில்லை. பூட்டற பழக்கம் இல்லாததால் போய்விட்டது. . என் அம்மாவிடம் இதை அழுது கொண்டேவிவரித்த போது, அதற்கு அம்மா சொன்ன வார்த்தையை இன்று வரை கடைபிடித்து வருகிறேன். அது.....”சௌகரியங்கள் இருக்கும் நீ ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும். இல்லாதவர்களை சொல்ல கூடாது.

Made with PosterMyWall.com

எடுக்கற அளவுக்கு தூண்டியதே நம் தப்பு தான். தவறுக்கும், குற்றத்துக்கும் அதிக வித்தியாசம் இல்லை. நீசெய்தது தவறுன்னு உணர்ந்தா, அவர்கள் குற்றத்தை ஒத்துக்க போறாங்க'' ன்னு சொன்னா. என்ன ஒருசத்தியமான வார்த்தை. இதை எழுதும் போதே கண் கலங்குகிறது. இது தான் எங்க அம்மா துணைதேவதைகளை நடத்தும் விதம்.

அடுத்து வந்த ஜெயந்தியை பற்றி சொல்லியே ஆக வேண்டும். என்னை மாதிரியே ரொம்ப சின்ன வயதில்கல்யாணம் ஆகி, இரண்டு பையன் பிறந்த பிறகு அவள் அம்மாவிடம் விட்டு விட்டு வேலைக்கு வந்தவள். இவள்எனக்கு கிடைத்தது நான் செய்த பாக்கியம்னு சொல்லணும். . அப்படி வேலை பார்ப்பா. என் குடும்பத்து மேலஅபரிதமான, அசைக்க முடியாத பாசம், உண்மை, நாணயம், நம்பிக்கை. . பிடிச்சு தள்ளனும் வீட்டுக்குகிளம்புன்னு. என்ன..மேடம் அடிக்கடி லீவு போட்டுடுவா. அதனால எங்களுக்குள் வாக்குவாதம் நடக்கும். ஆனால் அதெல்லாம் அரைமணி தான். ''இந்த அக்கா அப்படிதான்னு'' அவளும்,

Made with PosterMyWall.com

"இவளை திருத்தமுடியாதுன்னு" நானும் போயிடுவேன். அக்கா தங்கை மாதிரி தான் பேசுவோம். சண்டையும் போடுவோம். எங்கநடுவுல யாரும் வர கூடாது. வந்தாலும் அவளுக்கு பிடிக்காது. ஒரு தடவை பக்கத்து வீட்டு மாமி எதோ இவளைபேச, நான் அவங்க மேல இருக்கற மரியாதையில் இவளை சட்டை பண்ணாமல் போக, வந்தது வினை. இந்தஜெயந்தி... செஞ்சுகிட்டு இருந்த வேலையை பாதிலேயே விட்டுட்டு பையை எடுத்துண்டு வீட்டுக்குகிளம்பிட்டாள். போற போக்கில "எப்படி அந்த மாமியை பேசவிட்டு வேடிக்கை பார்த்தேன்னு" கோபமா கேள்விவேறு..

.நம்ப மாட்டீங்க.. இரண்டு நாள் கழித்தும் வராம போக... இதை கேள்விபட்ட எங்க அம்மா auto எடுத்துகிட்டு அவ வீட்டுக்கு போய் சமாதானம் பண்ணி கையோடு கூட்டிண்டு வந்தாங்க.

"உங்களுக்காக தான்வந்தேம்மா" ன்னு ஜெம்பமா எங்க அம்மா கிட்ட சொல்லிண்டே எங்க வீட்டுக்குள்ள வந்தவள் இந்தசுவாரசியமான ஆன துணை தேவதை. வேறு வீடு, வேறு இடம்ன்னு மாற, அதற்கு அப்புறம் கிடைத்த மனோன்மணி, ராணி, இப்ப இருக்கற சித்ராஎல்லோரும் உண்மையாகவே எனக்கு அமைந்த அம்சமான துணை தேவதைகள் தான். தனிதனியாக இவர்களைபற்றி எழுத ஆரம்பிச்சால் அது போகும். இந்த மும்பாய், பெங்களூர் ல்ல வண்டி எங்க வேணா பூந்துவந்துடலாம்னு சொல்ற மாதிரி,



Made with PosterMyWall.com

"சுதா அக்கா வீட்ல வேலை செஞ்சுட்டா எங்க போனாலும் பிழைச்சுக்கலாம்னு"சொல்லுவாங்க. அப்படி பயிற்சி கொடுத்துடுவேன். சீக்கிரம் வீட்டு வேலைமுடித்து, குழந்தைகள் திரும்பி வருவதற்குள் சினிமாவுக்கு போய் வருவோம். அப்பப்ப ஹோட்டல், ஊர்சுற்றுதலோடு கோவில் கட்டாயமா உண்டு. இன்றைக்கும் இவர்கள் எல்லோரும் காத்து கொண்டு இருப்பார்கள் நான் எப்போ இந்தியா வருவேன்னு. சிலவங்களோட குழந்தைகள் படித்து வேலைக்கு போய்வாழ்க்கையில் நல்ல நிலைமைக்கு வந்து விட்டார்கள்.

எங்க அம்மாவின் துணை தேவதைகள் , என் துணை தேவதைகள் எல்லோருக்கும் இன்றைக்கும் எங்களால், என்னால் ஆன, அந்தந்த நேரத்துக்கு ஏற்ப உதவிகள்னு சொல்றதை விட கைமாறு செய்து கொண்டு தான்இருக்கிறோம். யார்யாருக்கு என்னன்ன என்பதெல்லாம் விவரிப்பது தப்பு. பலன் இல்லாமல் போகும். எத்தனையோ சமயங்களில் எங்களுக்கு நல்ல உடன் பிறப்பாய், மூத்த சகோதரியாய், என் குழந்தைகளுக்கு மற்றொரு தாயாய், நல்ல ஆலோசகராய், பொறுப்பான குடும்பத்தினராய், அனுசரணையான தோழியாய் இருந்த, இருக்கிற இவர்களுக்கு இந்த பதிவு சமர்ப்பணம்.

படித்ததற்கு நன்றி.
சுதா விஜய்.

Made with PosterMyWall.com

இது கண்ணாடியின் மேல் வரையப்பட்ட ஓவியம். அழகிய பெண்ணொருத்தி விளக்குடன் நடனமாடும் ஓவியம். இதை நான் கோடை கால விடுமுறையில் வரைந்தேன்.

ஓவியர்- பிரத்துலா சுந்தரமதன்.



Made with PosterMyWall.com

Art by
Evangeline



Made with PosterMyWall.com

## கிராமத்து கதை சொல்லி

பகுதி -1 - இரவு நேர கதை பழைய நினைவுகளை அசைபோடுவதில் ஒரு அலாதியான மயக்கம். அதிலும் கிராமத்து நினைவலையில் சுவைக்குப் பஞ்சமே இருக்காது. எனது சிறுவயது காலத்தில் குறுவை சாகுபடி அறுவடைக் காலம் வந்துவிட்டாலே எனக்குள் ஒரு குதூகலம் வந்துவிடும் அதற்குக் காரணம் அடுத்த இரண்டு மாதங்களுக்கு இரவு நேரக் கதைகேட்க போகிறோம் என்ற மனமகிழ்ச்சி. குறுவை என்பது ஆனி அல்லது ஆடி மாதங்களில் பயிரிட்டு, புரட்டாசி அல்லது ஐப்பசி மதங்களில் அறுவடை செய்யும் குறுகிய கால பட்டம் (பட்டம் - பருவம் ). எங்கள் கழனியின் குறுவை அறுவடைக்கு அப்பா கிழக்கிலிருந்து அல்லது தெற்கிலிருந்தோ (ராமநாதபுரம், பாளையங்கோட்டை அதைச் சுற்றியுள்ள வானம் பார்த்த பூமியிலிருந்து )ஆட்களை அழைத்து வருவார். அவர்கள் எங்கள் கழனி அறுவடையோடு சேர்த்து இரண்டு மாத காலம் ஊரிலேயே தங்கி ஊரின் மற்ற அறுவடைகளையும் முடித்துச் செல்வார்கள். காரணம், உள்ளூர் வேலையாட்கள் இந்த மழை காலத்தில் எல்லோருக்கும் ஒரே மாதத்தில் அறுவடை செய்துகொடுக்க இயலாது அதனால் இவர்களை போன்றவர்களை அணுகி இங்கு அழைத்துவந்து அறுவடைகளை முடித்துக்கொள்வது வழக்கம். இந்த இரண்டு மாதங்களும் எங்கள் வீட்டுத்திண்ணையில் உறங்குவார்கள் பின்புறம் சமைத்து உண்பார்கள் சிலநாட்கள் அம்மாவே சமைத

இரவு உணவு முடிந்ததும் அந்த கூட்டத்தலைவர்(கங்காணி) கதை சொல்லுவதில் கெட்டிக்காரர் அர்ஜுனன் கதை, பீமன் கதை, நாடோடி கதைகள், பழைய அரச கதைகள் என அத்தனையும் அவருக்கு அத்துப்படி. கதை சொல்லும்போது அந்த கதாபாத்திரங்களை கண்முன்னே உண்மையாகவே கொண்டுவந்து விடுவார், நான் அந்த கதைகளை எல்லாம் கேட்டு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல்இருக்கும் ஆனால் இன்னும் அந்தக்கதைகளெல்லாம் பசுமரத்தாணி போல இன்னும் நெஞ்சில் நீங்காஅந்த கதைகேட்க சில சமயம் அண்டைவீட்டு உறவுகளும் வருவதுண்டு.

Made with PosterMyWall.com

அந்த கதைகளை வெறும் கதைகளாகப் பார்க்க முடியாது அவர்கள் அந்த வறுமை நிலையிலும் அடுத்த தலைமுறைக்கு ஏதோ ஒரு பயனுள்ள தகவலைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற வேட்கையையும், இரவில் உடல் சோர்வோடு மனச்சோர்வு கலக்காமல் இருக்க ஒரு மருந்தாகவும் இந்த கதைகளை பயன்படுத்தி இருக்கிறார்கள். உடல் சோர்வை கடந்து மறுநாள் காலையில் அவர்களால் வேலை செய்ய முடியும் ஆனால் மனச்சோர்வை எதிர்கொண்டு கடந்து செல்வது கடினமென அவர்களுக்குத் தெரிந்திருந்தது அதற்காகக் கதையை மருந்தாக பயன்படுத்தினார்கள். இந்த காலகட்டத்திலும் நம்மில் பலருக்கு FM அலைவரிசையில் தொகுப்பாளரின் கதைகேட்டுத் தூங்க பிடிக்கும், அது மனதை ஏதோ இலகுவாக்கி விடுகிறது மனச்சோர்விலிருந்து விடுவிக்கும் ஆறுமருந்தாகப் பயன்படுகிறது.

இந்த இரவு நேர கதை கேட்கும் பழக்கம் எல்லா நாடுகளிலும் உண்டு.அதற்கு இரண்டு காரணங்கள்உண்டு, ஒன்று மனதை சோர்விலிருந்து விடுவித்து இலகுவாக்குகிறது, இரண்டாவதாக இரவில் தூங்குவதற்கு முன்பு சொல்லும் வார்த்தைகள் அடிமனதிற்குள் சென்று பதிந்து விடுகிறது, இதனை நம்மில் பலர் உணர்ந்திருப்போம் இரவில் அம்மாவோ மனைவியோ/ கணவரோ நாளை காலை ஐந்து மணிக்கு கோவிலுக்கோ ஊருக்கோ செல்லவேண்டுமென்று சொல்லியிருப்பார்கள் நீங்கள் உங்களை அறியாமலேயே ஐந்து அல்லது அதற்கு முன்பே எழுந்து விடுவீர்கள், உங்களுடைய வழக்கமான எழும்பும் நேரம் அதுவாகவே இல்லாவிட்டாலும் கூட. இதுதான் அந்த இரவுநேர கடைசி செய்தியின் வலிமை. அதனால்தான் உறங்க செல்லும்முன் நல்ல விடயங்களைச் சொல்லி மற்றும் கேட்டுச் செல்ல வேண்டும்.

இப்பொழுதும் எங்கள் வீட்டில் என் மகள் இரவு நேரக் கதை என்னிடம் கேட்காமல் தூங்கச் செல்லமாட்டாள். நான்தான் சிலநாட்களில் வேலைப்பளு காரணமாக தட்டிக்கழிப்பதுண்டு, மற்றொரு காரணம் தமிழ் கதைகளைக் கேட்க ஆர்வம் அவளிடம் சற்று குறைவு,

Made with PosterMyWall.com



இருப்பினும் நான் தமிழ் கதைகளையே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து கூறுவது அதன்பிறகு சிறிது சிறிதாக அவளது கதை கேட்கும் ஆர்வத்தை அதிகரித்து தமிழிலேயே சொல்ல முயலுவேன். இந்த இரவு கதைகேட்கும் பழக்கத்தை உங்கள் குழந்தைகளுக்கும் ஆரம்பியுங்கள் இதுவரை இல்லாவிட்டாலும், அது புத்தகத்தினை விட வேகமாகவும் சிறந்த முறையிலும் உங்கள் குழந்தைகளைச் சென்றடையும்.

தொடர்ந்து பழங்கிராமக் கதைபேசுவோம்...

படைப்பாளி:
முருகேஷ் பாலசுந்தரம்

Made with PosterMyWall.com

பெயர்: மகேஷ்வர் பிள்ளை
க்ளிவ்லாந்து தமிழ் மலர் மன்றத்தில்
இரண்டாம் நிலை படிக்கும் மாணவன்,
பரிசுகள் கொடுப்பதும் வாங்குவதும்
மிகவும் பிடிக்கும்.




Made with PosterMyWall.com

**பெயர்**: லெய்லானி பிரேம்குமார்

க்ளிவ்லாந்து தமிழ் மலர் மன்றத்தில் நான்காம் நிலை படிக்கும் மாணவி, கதை எழுதுவதிலும், வரைவதிலும் ஆர்வம் மிக்கவர்.







Made with PosterMyWall.com

# நஞ்சுண்ட காற்றாய்...

நஞ்சோடு
கூடல்
செய்து
நெஞ்சுக்குள்
வந்துவிடுமெனக்
காற்றை...!

தொட்டுக்கொள்ளலாகாது
தொற்று
வந்து
சேருமென
விரலை...!

சொல்லோடு
ஊடலுற்று
எதிர்ச்சொல்லே
ஆகாதென
நாவை...!

பாரா
பழம்பொருளாய்
பகைதேடும்
பெருங்கூற்றாய்
கானக்கொடுக்காது
கவசமிட்டு
கண்மறையென
முகத்தை...!



Made with PosterMyWall.com

உரையாடி
விளையாடி
கதைபாடி
திரியாதேயென
நட்பை...!
முறைசொல்லி
விரலள்ளி
உறவாடி
கிடக்காதேயென
உறவை...!
மரணத்தை
மணந்தவரை
மறந்தொழிந்தும்
பாராயென
மனம்
இறுக
மனிதத்தை...!
தீண்டத்
தகா
பெருந்தீட்டாய்
பிரபஞ்ச
பெருந்திடலில்
பேசாபொருளா க்கிவிட்டாய்...
கொடியதனில்
கொடும் பொருளே
கொடுங்கோமகன்
கொரோனாவே...!





பெயர் : முருகேஷ் பாலசுந்தரம்
முகவரி :
தற்பொழுது : கிளீவ்லாந்து, ஒஹாயோ
நிரந்தரம் : பரவாக்கோட்டை, தமிழ்நாடு

பெயர் : ரிதன்யா முருகேஷ்

முகவரி : ஸ்ட்ராங்ஸ்விள், ஓஹாயோ



Made with PosterMyWall.com



இங்குள்ள ஓவியம் புள்ளிகளைக்கொண்டு வரையப்பட்டது. ஆப்பிரிக்க பழங்குடியின பெண் மற்றும் அவளின் ஆடை ஆபரணங்களை நீங்கள் இவ்ஓவியத்தில் பார்கக இயலும். புள்ளிகளைக்கொண்டு மிக நுணுக்கமாக வரையப்படுவதால் அது மனதை ஒருமுகபடுத்தும் ஆற்றல் மிக்கது. **(dot painting)**

ஓவியர் - மிருணாளினி.

Made with PosterMyWall.com

# ஓவியர்- பிரத்துலா சுந்தரமதன்



Made with PosterMyWall.com

வடகிழக்கு ஓஹயோ தமிழ்ச் சங்கம் வரலாற்று நிகழ்வான "திடல்" -ன் இந்தப் பதிப்பில் பங்களிப்பு தந்த உறுப்பினர்களுக்கு அளப்பரிய நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

இனி வரும் பதிப்புகளுக்கும் தங்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தொடர்ந்து அளிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்!

தமிழ் வளர்ப்போம்!!
பாரம்பரியம் காப்போம்!!

# நன்றி

# வணக்கம்



Made with PosterMyWall.com